பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

24 09 2025 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியாவை ஒன்றிணைத்ததன் மூலம் வலிமையான இந்தியாவிற்கு அடித்தளமிட்டவர் சர்தார் வல்லபாய் பட்டேல் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. உத்தரப்பிரதேசம், குஜராத் மாநிலங்களிலிருந்து, பருப்பு மற்றும் எண்ணெய் வித்துக்களை கொள்முதல் செய்ய, மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

3. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு, கல்வி மற்றும் திறன் பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு.வீரேந்திர குமார் கூறியுள்ளார்.

4. ரஷ்யாவிடம் இழந்த பகுதிகளை நேட்டோ நாடுகளின் ஆதரவுடன் யுக்ரைன் மீண்டும் கைப்பற்றும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

5. 2030ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை அகமதாபாதில் நடத்துவதற்கு இந்தியா முறைப்படி விண்ணப்பித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியாவை ஒன்றிணைத்ததன் மூலம் வலிமையான இந்தியாவிற்கு அடித்தளமிட்டவர் நாட்டின் முதலாவது உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் பட்டேல் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் மானசாவில் சர்தார் பட்டேல் சிலையை திறந்து வைத்துப் பேசிய அவர், நாடு சுதந்திரம் அடைந்த பின் தொலைநோக்கு மற்றும் துணிச்சலுடன் பல்வேறு மாகாணங்களை ஒன்றிணைத்தவர் பட்டேல் என்று குறிப்பிட்டார்.

விவசாயிகளின் உரிமைகளுக்காக பாடுபட்டவர் அவர் என்றும் கூறினார்.

தற்போது திறக்கப்பட்டுள்ள சிலை இப்பகுதியில் உள்ள மக்களுக்கு பட்டேலின் கருத்துகளை எடுத்துரைப்பதாக அமையும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசம், குஜராத் மாநிலங்களிலிருந்து, பருப்பு மற்றும் எண்ணெய் வித்துக்களை கொள்முதல் செய்ய, மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் ஒப்புதல் அளித்துள்ளார்.

வேளாண் விளைபொருட்கள் கொள்முதல் தொடர்பாக, காணொலி வாயிலாக நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசிய அவர், இரு மாநிலங்களிலும், உளுந்து மற்றும் துவரம் பருப்புகளை முழுமையாக கொள்முதல் செய்யுமாறு உத்தரவிட்டார்.

பாசிப்பயறு, எள், கடலை மற்றும் சோயாபீன் உள்பட,13 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்புள்ள பருப்பு வகைகள் கொள்முதல் செய்ய அனுமதி அளிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் கூறினார்.

கொள்முதல் நடவடிக்கைகள், வெளிப்படையாகவும், விவசாயிகளுக்கு பயனளிக்கும் விதமாகவும், டிஜிட்டல் முறையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று, அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

இந்த கொள்முதல் மூலம், உண்மையான விவசாயிகள் பயனடைவதை உறுதி செய்வதோடு, இடைத்தரகர்களின் தலையீட்டைத் தடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

ரயில்களை 100 சதவீதம் சரியான நேரத்தில் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு.அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டிலுள்ள 70 ரயில்வே கோட்டங்களில், நாக்பூர், ஜெய்ப்பூர், அகமதாபாத், ராஞ்சி உள்ளிட்ட 29 கோட்டங்களில், 95 சதவீத ரயில்கள், சரியான நேரத்தில் இயக்கப்படுவதாக கூறினார்.

விரைவில் அனைத்து கோட்டங்களிலும், சரியான நேரத்தில் ரயில்கள் இயக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தீபாவளி மற்றும் சத் பண்டிகைகளை முன்னிட்டு அக்டோபர் ஒன்றாம் தேதி முதல் நவம்பர் 15-ந் தேதி வரை சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவற்றில் 10ஆயிரம் ரயியல்களுக்கான அறிவிப்பு ஏற்கனவே வெளியிடப்பட்டுவிட்டதாகவும், கடைசி நேரத் தேவைக்காக முன்பதிவில்லாத 150 ரயில்கள் தயார் நிலையில் வைக்கப்படும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

நாட்டிலுள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு, கல்வி மற்றும் திறன் பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகளை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மேற்கொண்டு வருவதாக, மத்திய சமூகநீதித்துறை அமைச்சர் திரு.வீரேந்திர குமார் கூறியுள்ளார்.

சைகை மொழி தினத்தையொட்டி, புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மாற்றுத்திறனாளி மாணவர்கள் கல்வி பயில்வதற்கான உதவிகளை, அரசு வழங்கி வருவதாக குறிப்பிட்டார்.

இந்திய சைகை மொழி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், இதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகவும், 2ஆயிரத்து 300 சைகை மொழி வீடியோக்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சைகை மொழி கற்றலை மேம்படுதுதுவதற்கான, பல்வேறு திட்டங்களையும், இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் திரு.வீரேந்திரகுமார் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

உலக அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெறும் தகுதியைப் பெற்றிருப்பதன் மூலம், இந்தியா சர்வதேச விளையாட்டு மையமாக உருவெடுத்துள்ளது என்று, மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெறவுள்ள உலக பாரா தடகள சாம்பியன் போட்டிக்கான ஏற்பாடுகளை ஆய்வுசெய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தப் போட்டிகள், நாளை தொடங்க இருப்பதாகத் தெரிவித்தார்.

நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த வீரர் - வீராங்கனைகள் இதில் பங்கேற்க இருப்பதாகவும், இது இந்தியாவின் திறமைகளைப் பிரதிபலிக்கும் மிகப்பெரிய பாரா-தடகளப் போட்டியாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலக நாடுகளை ஒன்றினைக்கும் சக்தியாக, விளையாட்டை மேம்படுத்த இந்தியா உறுதி பூண்டிருப்பதாகவும் திரு.மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<>>>>

ரஷ்யாவிடம் இழந்த பகுதிகளை நேட்டோ நாடுகளின் ஆதரவுடன் யுக்ரைன் மீண்டும் கைப்பற்றும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தியபின் தமது சமூக வலைதளத்தில் இதனைப் பதிவிட்டுள்ள அவர், Kyiv உள்ளிட்ட பகுதிகளை யுக்ரைன் கைப்பற்றுவது உறுதி என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபரின் இந்த அறிவிப்பை யுக்ரைன் அதிபர் வரவேற்றுள்ளார்.

யுக்ரைன் குறித்த அமெரிக்காவின் நிலைப்பாட்டில் இது பெரிய மாற்றமாக கருதப்படுவதாகவும் திரு. ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

முன்னதாக ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. டோனல்ட் ட்ரம்ப், காஸா பகுதியில் அமைதியை ஏற்படுத்த தாம் முயற்சித்து வருவதாகத் தெரிவித்தார்.

அதேவேளையில் பாலஸ்தீன தனி நாட்டிற்கு அங்கீகாரம் அளிப்பது ஹமாஸ் தீவிரவாத அமைப்புக்கு வெகுமதி அளித்ததாக அமைந்துவிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களால், மருந்துகள் மற்றும் அன்றாட வீட்டு உபயோகப் பொருட்களின் விலை குறைந்திருப்பது, மக்களின் பணத்தை சேமிக்க உதவியிருப்பதாக, பி.ஜே.பி. கூறியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் திரு.சம்பித் பத்ரா, விலைக் குறைப்பு காரணமாக, மக்கள் மகிழ்ச்சி அடைந்திருப்பதாக தெரிவித்தார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகளின் தலைவர்களும், அமைச்சர்களும் மேற்கொண்ட ஆய்வில், இது உறுதியாகியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் தான் பல்வேறு வகையான வரிகள் விதிக்கப்பட்டதாகவும், கடந்த 75 ஆண்டுகளாக அவற்றை ஒழுங்குபடுத்தாமல் விட்டுவிட்டதாகவும் அவர் கூறினார்.

பி.ஜே.பி. மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் திரு.சம்பித் பத்ரா தெரிவித்தார்.

<<<<>>>>

உணவுதானிய மேலாண்மையில், பொறுப்புணர்வு மற்றும் சேமிப்புத் திறனை உறுதி செய்யும் விதமாக, மத்திய உணவு மற்றும் பொது வினியோகத் துறைக்கும், இந்திய உணவுக் கழகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இது தொடர்பாக, மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது வினியோகத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், உணவுப்பொருள் வினியோகத்திற்கான செயல்திறனை நிர்ணயிக்க, இந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு தான்ய சேமிப்புக் கிடங்குகளில் ஏற்படும் இழப்பைக் குறைத்து, கிடங்குகளின் திறனை முழு அளவிற்கு பயன்படுத்துவதோடு, தரக் கட்டுப்பாட்டை உறுதி செய்து, வினியோக முறையை மேம்படுத்தவும், இந்த ஒப்பந்தம் வகை செய்வதாக கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

மணிப்பூரின் பல்வேறு பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் கூட்டாக மேற்கொண்ட சோதனையில் 9 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து பெருமளவிலான ஆயுதங்கள், வெடிபொருட்கள் மற்றும் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக ராணுவ செய்தித் தொடர்பாளர் லெப்டினெண்ட் கர்னல் அமித் சுக்லா தெரிவித்துள்ளார்.

மணிப்பூரில் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிறுவனம், சர்வதேச மீன்வள அமைப்புகளுடன் இணைந்து நடத்தும் 12வது ஆசிய மீன்வள நோய்கள் குறித்த

சர்வதேச மாநாட்டை மத்திய மீன்வளத்துறை இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

தமிழகத்தின் சென்னையில் நேற்று தொடங்கிய இந்த மாநாடு, வரும் 27ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

நீர்வாழ் உயிரினங்களின் சுகாதார மேலாண்மைக்கான எதிர்காலத்தை உருவாக்கும் மாற்றுத் தொழில்நுட்ப புதுமைகள் என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.

<<<<>>>>

2030ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை அகமதாபாதில் நடத்துவதற்கு இந்தியா முறைப்படி விண்ணப்பித்துள்ளது.

குஜராத் மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஹர்ஷ் சங்கவி மற்றும் இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திருமதி பி.டி. உஷா ஆகியோர் தலைமையில் லண்டன் சென்ற இந்தியக் குழுவினர், காமன்வெல்த் விளையாட்டு மதிப்பீட்டுக் குழுவிடம் நேற்று இதற்கான விண்ணப்பத்தை அளித்தனர்.

------------

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-4 சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

இப்போட்டி துபாயில் இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

--------------

உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டிகள் புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

அடுத்த மாதம் 2ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில், ரைஃபிள், பிஸ்டல், ஷாட் கன் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட 18 நாடுகளைச் சேர்ந்த 208 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தியாவின் சார்பில் 69 பேர் கொண்ட அணி இதில் கலந்துகொள்கிறது.

--------------

அமெரிக்க கிரிக்கெட் அமைப்பு விதிமுறைகளை முறையாக பின்பற்றாததால் அந்த அமைப்பு சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலில் இருந்து தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் 2028ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்க அணி பங்கேற்க ஐ.சி.சி. அனுமதி அளித்துள்ளது.

<<<<The End>>>>